Registered as a NewsPaper பக்கங்கள் 06 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்:- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 16 (28 - 04 - 1992) செவ்வாய்க்கிழமை ஓசை: 70

## க. பொ. த. (சா) பரீட்சை பெறுபேறு மீளாய்வு

அண்மையில் வெளியான க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேற்றை மீளாய்வு செய்வதற்கு விரும்பும் பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மீளாய்வு செய்ய விரும்பும் பாடசாலை விண்ணப்பதாரிகள் தத்தமது பாடசாலை அதிபரூடாகவும், தனிப்பட்ட பரீட்சார்த்திகள் நேரடியாக பரீட்சை ஆணையாளர், மதிப்பீட்டுக்கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், மலே வீதி, கொழும்பு - 2 என்ற முகவரிக்கும் (6ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவுக்கு பிரேமதாசா மறைமுகமான எச்சரிக்கை

## அந்நிய தலையீட்டை அனுமதியோம்

(கொழும்பு)

சிறிலங்காவின் அரசியல், சமூக, பொருளாதார விவகாரங்களில் வெளிநாட்டு சக்திகள் தலையிடுவதையும், கட்டுப்படுத்த முனைவதையும் நாம் ஒரு பொழுதும் அனுமதிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்தார். இந்த எச்சரிக்கை இந்திய அரசுக்கே விடுக்கப்பட்டதாக கொழும்பு ராஜதந்திர வட்டாரங்கள் கூறின.

அம்பாந்தோட்டையில் நேற்று இடம்பெற்ற ஐ.தே.க. மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரேமதாசா இவ்வாறு குறிப்பிட்டார்.

சார்க் நாடுகளின் வெளியுறவுச் செயலாளர்களின் மகாநாடு கொழும்பில் நேற்று ஆரம்பமாகியுள்ள வேளையில் பிரேமதாசா இவ்வாறு குறிப்பிட்டமை முக்கியத்துவம் வாய்ந்தது எனவும் அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

மேலும் நாட்டின் முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அரசாங்கம் முன்வைத்துள்ள திட்டங்களுக்கு மாற்றுத் திட்டங்களை முன் வைக்க எதிர்க்கட்சிகள் தவறிவிட்டன என்றும் பிரேமதாசா குறிப்பிட்டார்.

மக்களின் பிரச்சினைகளுக்கு (6ம் பக்கம் பார்க்க)

### பிரச்சினைகளை தீர்க்காவிட்டால்

## இந்தியாவை நாடுவதைதவிர வேறுவழி ஏதுமில்லை

### -குமார் பொன்னம்பலம்

(கொழும்பு)

இலங்கை தனது பிரச்சினைகளைத் தானே தீர்த்துக் கொள்ள முன்வரவில்லையானால், அது அண்டை நாடான இந்தியாவின் உதவியை நாடுவதைத் தவிர வேறுவழி இல்லை என்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் குமார் பொன்னம்பலம் கூறியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில் இலங்கையின் இனப் பிரச்சினையில் இந்தியா உதவியதில் எந்த உள்நோக்கமும் கிடையாது எனவும், இலங்கைக்கும் - இந்தியாவிற்கும் இடையே 1987 இல் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி இலங்கை நடந்துகொள்ள வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

## நிவாரண வேலைகளுக்கு நிதிபெற அ. அதிபர் முயற்சி

யாழ். மாவட்டத்தின் நிவாரண வேலைகளுக்கு நிதி பெறுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது.

யாழ். செயலகத்தில் தேங்கிக்கிடக்கும் புனர்வாழ்வு விண்ணப்பங்களின் ஒரு பகுதிக்கான நிவாரணக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காகவே இம் முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது.

சுமார் முப்பதினாயிரம் குடும்பங்களுக்கான நாலாயிரம் ரூபா கொடுப்பனவுகளை வழங்குவதற்குத் தேவையான சுமார் 120 மில்லியன் ரூபாவை செயலக புனர்வாழ்வுப் பிரிவுக்கு வழங்குவதற்கு புனர் வாழ்வு அமைச்சு கொள்கை அளவில் சம்மதம் தெரிவித்திருக்கிறது. கடந்த மாதம் கொழும்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே இச் சம்மதம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (க)

## மீனவர்கள் மூவர் கடற்படையினரால் கைது?

(யாழ்ப்பாணம்)

பூநகரிக் கடற்பகுதியில் மீன் பிடிக்கச்சென்ற குருநகரைச் சேர்ந்த மூன்று மீனவர்கள் கடந்த ஆறுநாட்களாகத் திரும்பிவரவில்லை. இவர்கள் சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீன் பிடிக்க வள்ளத்தில் சென்ற குருநகரைச் சேர்ந்த அ. குட்டி (வயது 42), லோ. சின்னத்தம்பி (வயது 63), சி. பிறேமன் (வயது 34) ஆகிய மூவருமே இன்றுவரை திரும்பி வரவில்லை.

(6ம் பக்கம் பார்க்க)

## வீரவேங்கை புனிதன்



கடந்த 20 ஆம் திகதி தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது புலிகளால் மேற்கொள்ளப்பட்ட திடீர் தாக்குதல் ஒன்றில் புனிதன் (நவசிவாயம் சிறிதரன் 4 ஆம் வட்டாரம் புங்குடுதீவு) வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

## வீரச்சாவு

கப்டன் வேங்கையன்
கப்டன் சிவராமன்
லெப். செந்தோழன்
லெப். கர்ணன்
2ஆம் லெப். முத்து

மணலாறு மாவட்டத்தில் நேற்று முன் தினம் சிறிலங்கா இராணுவத்தினர் நடத்திய தாக்குதல்களில் கப்டன் வேங்கையன் (மார்க்கண்டு ஜெகநாதன் சின்னவத்தை மட்டக்களப்பு) கப்டன் சிவராமன் (அல்பேர்ட் அருள்சீலன் வட்டக்கண்டல், மன்னார்) லெப்டினன்ட் செந்தோழன் தியாகராசா தயாபரன் திரு) மலை வீதி மட்டக்களப்பு) லெப்டினன்ட் கர்ணன் (தவராசசீலன் பிரதீபன் இருதயபுரம் மட்டக்களப்பு) இரண்டாம் லெப்டினன்ட் முத்து (தங்கராஜா மன்மதராஜா சின்னவத்தை மட்டக்களப்பு)

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் மோதல் புலிகள் இருவர் வீரச்சாவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் குறிஞ்சாமுனை என்னுமிடத்தில் நேற்றுக் காலை பதுங்கியிருந்த சிறிலங்கா இராணுவத்தினருடன் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மோதலில் முன்னாள் பத்திரிகையாளரான கப்டன் நித்தி (இராஜசயா நித்தியானந்தன் மஞ்சத்தொடுவாய் மட்டக்களப்பு), வீரவேங்கை பாலுமகேந்திரா (கணபதிப்பிள்ளை உருத்திரா ஆலையடிவேம்பு அக்கரைப்பற்று) ஆகியோர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

## இராணுவ ரோந்து அணி புலிகளால் விரட்டியடிப்பு

மணலாறு மாவட்டத்திலுள்ள கொக்குத் தொடுவாய் பகுதியில் ரோந்து வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் திடீர்த் தாக்குதல் ஒன்றை நடத்தி முகாமிற்குள் விரட்டியடித்தனர். நேற்று முன்தினம் எட்டு மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய ஒரு மணிநேர தீவிர தாக்குதல்களில் இராணுவத்தினர் பலத்த இழப்புக்களுடன் பின்வாங்கியுள்ளனர்.

பின்னர் மண்கிண்டிமலை, முந்திரிகைக்குளம் ஆகிய பகுதிகளிலிருந்து பலத்த எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

அதேவேளை உலங்குவானூர்திகளும், கடற்படைப் பீரங்கிப் படகுகளும் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

## திராய்சோலையில் முற்றுகை பதினேழு தமிழர் கைது

(மட்டக்களப்பு)

களுவாஞ்சிக்குடி, மண்டூர், பதின்மூன்றாம் கிராமம், பதினான்காம் கிராம் ஆகிய பகுதிகளிலிருக்கும் முகாம்களிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினரும், தேசவிரோத சக்திகளும் திராய்ச்சோலை கிராமத்தைச் சுற்றிவளைத்து தீவிர தேடுதல் நடத்தினர். இச்சுற்றிவளைப்பின்போது அங்கிருந்த தமிழ் மக்கள் மோசமாகச் சித்திரவதை செய்யப்பட்டதுடன் பதினேழு தமிழர்கள் முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

கணேசன் தங்கராசா, மார்க்கண்டு நடேசபெருமாள், வேலாயுதம் தம்பிராசா, சரவணமுத்து கோவிந்தபிள்ளை, செல்வநாயகம் குமாரசிங்கம், மாரிமுத்து யோகநாதன்,

(6ம் பக்கம் பார்க்க)

## கண்ணியில் சிக்கி படையினர் பலர் பலி

(மன்னார்)

மன்னாரில் விடுதலைப் புலிகள் வைத்த வாகனக் கண்ணி வெடியில் சிக்கிய இராணுவத்தினர் பலர் கொல்லப்பட்டனர்.

நேற்று நண்பகல் மன்னார் மாவட்டத்திலுள்ள வங்காலை இராணுவ முகாமிலிருந்து நானாட்டான் முகாம் நோக்கி ரோந்து சென்றுகொண்டிருந்த போது வாகனக் கண்ணிவெடியைக் கண்டு அதனை அகற்ற முற்பட்ட சமயம் அக்கண்ணி வெடி வெடித்ததமையால் பல இராணுவத்தினர் உடல் சிதறிப் பலியாகினர்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் படை எடுப்பிற்கு சிங்கள இராணுவம் முஸ்தீபு

### மன்னார், வவுனியாவில் ஊரடங்கு

(வவுனியா)

வவுனியா - மன்னார் மாவட்ட எல்லைகளிலுள்ள இராணுவ முகாம்களில் பெருமளவு படைகுவிப்புக்கள் நடைபெற்று வருவதாகவும், பெரும் படை எடுப்பொன்றிற்கு முஸ்தீபுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அங்கி

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

நாவலர் வீதி, ஆனைப்பந்திச் சந்திக்கும் கைலாசபிள்ளையார் கோயிலுக்கும் இடையில் அல்லது அம்பலவாணர் வீதியில் வெள்ளை நிறக் கைப்பை (Purse) ஒன்று தவறிவிட்டது அதற்குள் முக்கிய ஆவணங்கள் உள்ளதால் கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (2510)

### தொண்டர் ஆசிரியர் விபரம் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர் சங்கம் தற்போது அனைத்து தொண்டர் ஆசிரியர்களினதும் விபரங்களைச் சேகரித்துப் பதிவு செய்து வருகின்றது.

29-04-92 (புதன்கிழமை) தொண்டர் ஆசிரியர் விபரங்கள் பட்டப்படிப்புகள்கல்லூரியில் வைத்துப் பதிவு செய்யப்படவிருக்கிறது. எனவே அனைத்து தொண்டர் ஆசிரியர்களும் தத்தமது விபரங்களுடன் வந்து பதவு செய்யுமாறு தொண்டர் ஆசிரியர் சங்கச் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# "ஒடுக்கப்பட்ட தேசங்களின் மக்களே ஒன்றுபடுங்கள்"

-மேநாள் அறைகூவல்

ஆண்டான் அடிமை சமுதாயத்தில் இருந்து ஒடுக்குபவனும் ஒடுக்கப்படுபவனும் என்ற சமுதாய நிலைப்பாடே இருந்து வருகிறது. பாட்டாளிகள் உழைப்பை ஊதியத்திற்கு விற்றனர் முதலில் தானியமாகவும் பின்னர் பணக்கூலியாகவும் ஊதியத்தைப் பெற்றனர். உழைப்பவன் உயிருடனிருப்பதற்காகவும் அவன் தன்னைப் போன்ற உழைப்பாளரை பெருக்குவதற்கும் போதுமானதாக மட்டுமே அவனுக்கு கூலிதரப்பட்டது. அவன் தனது வாழ் நிலையை ஆண்டானுக்கு நிலப்பிரபுவிற்கு. முதலாளிக்கு அடகு வைக்கும் நிலை தோன்றியது.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பிரிவு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

நாடுகள் ஆக்கிரமிக்கப்பட்ட போது இனரீதியான ஒடுக்குதலும் உருவானது. இதனால் வெல்லப்படும் இனங்கள் அடிமையினங்கள் ஆகின. இவர்கள் தாயகத்தை இழந்தனர். பொருளாதார அடிப்படையை இழந்தனர். பண்பாட்டு விழுமியங்களை இழந்தனர். இதனால் ஒடுக்கப்படும் இனங்களின் உழைப்பாளிகள் இருவித பாதிப்புக்களைக் கண்டனர் ஒன்று சுரண்டல் மற்றது இன ஒடுக்குமுறை.

ஒரு தேசிய இனம் பேரினவாத ஒடுக்குதலுக்கு ஆளாகும்போது அத்தேசிய இனத்தின் உழைக்கும் மக்கள் முதன்மை முரண்பாடாகிய இன ஒடுக்கலுக்கு எதிரான அனைத்து மக்களது தேசிய விடுதலைப் போராட்டத்தில் இணைய வேண்டிய, முன்னெடுக்க வேண்டிய வரலாற்றுத் தேவை உருவாகிறது.

நாம் காலம் காலமாக இனரீதியான அழிப்புகளுக்கு ஆளாகி வந்துள்ளோம் பேச்சுவார்த்தைகள் நடந்தன. ஒப்பந்தங்கள் வரையப்பட்டன. ஆனால் பேரினவாதம் இவற்றை விழுங்கியது எனவே நாம் நமது தாயகத்தில் சுய கௌரவத்துடன் வாழ, வளம் காண, போராட வேண்டிய கால கட்டம் அரும்பியது, முகிழ்த்தது,

இலங்கையில் பேரினவாத நடவடிக்கைகள் நிறுவனமயப்பட்டது. முதலில் மொழியில் கைவைத்தனர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சுரண்டுபவனுக்கும் சுரண்டப்படுபவனுக்கும் பொதுமொழி அவசியமாகியது. அது ஆங்கிலம். அவர்கள் வெளியேறியதும் ஆங்கிலத்தின் இடத்தைச் சிங்களம் பிடித்துக்கொண்டது, , எம்மைப் பொறுத்தவரை குடியேற்றம், கல்வி, வரலாற்றுத் திரிபுகள் பேரினவாத செயற்பாடுகள் தொடர்ந்தன.

எனவே எமது தேசிய விடுதலைப் போராட்டம் எமது உழைக்கும் மக்களின் எழுச்சியை வேண்டி நிற்கிறது. உலகெங்கும் தேசிய இனங்களின் எழுச்சி, விடுதலை உணர்வு யதார்த்தமாகிவிட்டது. "ஒடுக்கப்பட்ட தேசங்களின் மக்களே ஒன்றுபடுங்கள்" எனும் கோஷம் முன்வைக்கப்படுகிறது இம் மே நாளில்

மேற்படி கோஷம் மேநாளின் முக்கியத்துவத்தை அறைகூவலாக எதிரொலிக்கட்டும்.

மேநாளில் அனைத்து மக்களையும் அணிதிரளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் பிரிவு கேட்டுக்கொள்கின்றது.

### சான்றிதழ் வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

மூளாய் சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலைய சான்றிதழ் வழங்கும் வைபவம் வரும் மே 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணியளவில்யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம் பீடாதிபதி பேராசிரியர் க. பாலசுப்பிரமணியம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

### சேகரம் கொழும்பில் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானநிலையத்தில் தமிழர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இது பற்றி தகவல் வெளியிட்ட கொழும்புப் பொலிசார் கைது செய்யப்பட்ட நபர் சேகரம் என்று அடையாளம் காணப்பட்டதாகவும் இவர் முன்பு விடுதலைப்புலிகளால் நடாத்தப்பட்ட நீதிமன்றத்தில் நீதிபதியாகக் கடமையாற்றியவர் என்றும் தெரிவித்துள்ளனர்.

## மே தினத்திற்கு ஆள்திரட்ட ஐ. தே. க. பரிசு அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினக் கூட்டத்திற்கு பெருமளவில் ஆட்களைக் கொண்டு வரும் மூன்று தேர்தல் தொகுதிகளுக்கு விசேட பரிசுகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இம் மேதின நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள தென்னிந்திய திரையுலகப் பிரமுகர்களும் கலைஞர்களும் அழைக்கப்படடுள்ளனர். சங்கர் - கணேஷ், ஏ. எல். ராகவன், ஜி கி எம்.எஸ்.ராஜேஸ்வரி, ஜூனியர் ராஜா போன்றவர்களுடன் உஷா மங்கேஸ்கர், கிஷோர் குமாரின் புதல்வர்களான அமீத்குமார், சாமீத் குமார், நகைச்சுவைக் கலைஞரான ஜொனிபாத்தர் மற்றும் நடனதாரகை ஜெமில லத்கான் ஆகியோரும் அழைக்கப்பட்டவர்களில் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## முன் கூட்டியே தேர்தல்; பிரேமதாசா நிராகரிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தல்கள் முன் கூட்டியே நடத்தப்படும் என்று தெரிவிக்கப்படும் ஊகங்களை சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா நிராகரித்தார். குறிப்பிட்ட காலத்தில் இத் தேர்தல்கள் நடத்தப்படுவதற்கு முன்பாக வர்க்க பேதங்கள் தீர்க்கப்பட அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இவ்வாறு ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா ஞாயிறு இரத்தனபுரி நகர மண்டபத்தில், அம் மாவட்டத்தின் ஐ. தே. கட்சி மாநாட்டில் கூறினார்.

மேலும் அவர் அங்கு உரையாற்றுகையில் நாட்டில் இன்று நிலவுவது வர்க்க பேதத்தினால் ஏற்பட்ட பிரச்சினையே என்றார்.

அரசியல் அதிகாரமும், பொருளாதாரத் தளமும் தமது கைகளிலேயே இருக்க வேண்டும் என்று ஒரு சிறிய குழுவினர் விரும்புகின்றனர். செல்வாக்கும், வசதியாகவும் விளங்கும் இவர்கள் எல்லாக் கட்சிகளுக்குள்ளும், எல்லாச் சமூகத்தினர் மத்தியிலும் பிரச்சினையைத் தோற்றுவிக்கின்றார்கள். தங்கள்குறிக்கோளை அடைவதற்காகப் பாரிய குற்றவாளிகளுக்கும் ஆதரவளிக்க முற்படுகிறார்கள் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

### ரூபசேனவின் படுகொலை

## அரச பயங்கரவாதம் இன்னும் கோலோச்சுகிறது

-மகிந்த ராஜபக்ஸ

(மாத்தளை)

எம்முடன் கதிர்காமம் பாதயாத்திரை வந்த ரூபசேன என்பவர் மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இதன் மூலம் இந்நாட்டில் இன்னும் பயங்கரவாதம் அரசோச்சுகிறது என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கிறது.

மேற்கண்டவாறு எம்பிலிப்பிட்டிய சமகந்தையில் ரூபசேன வீரதுங்காவின் இரங்கல் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அம்பாந்தோட்டை பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த ராஜபக்ஸ தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது கதிர்காமம் பாதயாத்திரையை மேற்கொண்ட ஊருக்கு திரும்பிய இரண்டு மூன்று தினங்களில் அவர் மிக இரகசியமான முறையில் படுகொலை செய்யப்பட்டிருப்பது எம்பிலிப்பிட்டிய மக்களை பெரும் அதிர்ச்சியிலும் சந்தேகத்திலும் மூழ்கடித்திருக்கிறது

மேலும் பயங்கரவாதம் பற்றியும் ஊழல்கள் பற்றியும் பெரிதாக பேசிக்கொள்வோர் இது போன்ற அநியாயமான மனிதப் படுகொலைகளுக்கு என்ன நியாயம் கூறப்போகின்றனர்? பாதயாத்திரை சென்று வந்த பின்னர் அவரை ஒழித்துக்கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தவர்களையும் படுகொலை செய்தவர்களையும் பிடித்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டியது பொலிஸாரின் பொறுப்பாகும். சந்தேக நபர்களை கைது செய்யும் வரை நான் ஓயப்போவதில்லை பயங்கரவாதத்தையும் இந்நாட்டில் இருந்து விரட்டி அடிக்கும் காலமும் நெருங்கி விட்டது எனவும் தெரிவித்தார்.

## உணவு ஏற்றச்சென்ற லொறி வெறுமனே திரும்பியது

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை துறைமுகப் பகுதிக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களை எடுத்து வருவதற்காகச் சென்ற வாகன அணிநேற்றுமுன்தினம் பொருள்கள் எதனையும் எடுத்து வராமல் வெறுமனே திரும்பி வந்தது.

மேற்படி வாகன அணி வழமையாக பிரயாணம் செய்யும் வீதியைப் பயன்படுத்த முடியாத நிலை உருவாகியதாலேயே இவ்வாகன அணி திரும்பி வந்து விட்டது.

கீரிமலை சேந்தாங்குளம் பிரதான வீதியில் குறிப்பிட்ட பகுதி பாவனைக்குதவாத நிலையில் இருந்ததால் இது வரைகாலமும் அப்பகுதியில் மட்டும் வீதியை விட்டு விலகியே இந்த வாகன அணி சென்று திரும்புவது வழக்கம். ஆனால் இப்பகுதியில் கடும் மழை பெய்துள்ளதால் மேற்படி பகுதி ஊடாக உணவுப் பொருள்களை ஏற்றிய நிலையில் மேற்படி வாகன அணி பயணம் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதனாலேயே நேற்றுமுன்தினம்மேற்படி துறைமுகப் பகுதிக்குச் சென்ற வாகன அணி வெறுமனே திரும்பி வந்துள்ளது. வெய்யிலினால் இப்பாதை காய்ந்து பிரயாணத்துக்கு ஏற்ற வகையில் மாறியதுமே மீண்டும் வாகன அணி இத்துறைமுகப் பகுதிக்குச் செல்லும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது (க)

### சபுகஸ்கந்த சுத்திகரிப்புநிலையம் மூடப்படும்

(கொழும்பு)

வரும் யூன்மாதம் தொடக்கம் மூன்றுமாதங்களுக்கு சபுகஸ்கந்த பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையம் மூடப்படவுள்ளது.

இக்காலப் பகுதியில் பெற்றோலிய தேவைகளைப் பூர்த்தி செய்ய சிங்கப்பூர் கம்பனிகளின் உதவியைப் பெற முடிவுசெய்யப்பட்டுள்ளது.

### காணாமற் போனோர்

## விசாரணைக் குழுவின் கால எல்லை நீடிப்பு

காணாமல் போனவர்கள் பற்றி விசாரணை நடாத்த என சிறிலங்கா ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் கால எல்லை மேலும் ஓராண்டு காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த நீடிப்பின் மூலம் அடுத்த ஆண்டு ஏப்பிரல் மாதம் வரை இந்த ஆணைக்குழு செயற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## நினைவுகூருகின்றோம்...

## 1992-04-28

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் திருக்கோணமலை, கந்தளாய்ப் பகுதியில் முஸ்லிம் ஊர்காவற் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**கப்டன் குட்டி / தினேஸ்** (முகமது அனிபா முகமது ஹான் - 1 ஆம் குடியிருப்பு, பேராறு, கந்தளாய், திருக்கோணமலை.)

1988 ஆம் ஆண்டு மன்னார் வெள்ளாங்குளம் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய -

**மேஜர் நரேன்** (நல்லைநாதன் ஜனார்த்தன் - 218/9, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.)

இதே ஆண்டு தேசவிரோத சக்திகளினால் படுகொலை செய்யப்பட்ட எமது ஆதரவாளர் -

**ஐயம்பிள்ளை கணபதிப்பிள்ளை** (வட்டக்கச்சி, கிளிநொச்சி.)

1991 ஆம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்துடனான மோதலில் விழுப்புண் அடைந்திருந்து யாழ். மருத்துவமனையில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். விசுவாசம்** (பொன்னுத்துரை சுதாகரன் - வவுனிக்குளம், துணுக்காய்.)

**லெப். ஆனந்தன்** (கிருஸ்ணராஜா சந்திரன் - திருவையாறு, கிளிநொச்சி.)

**சுவித்** (இராஜரட்ணம் சிவசுப்பிரமணியம் - கிளிநொச்சி.)

ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினர் குறிபார்த்துச் சுட்டதில் வீரச்சாவெய்திய -

**றெஜினோல்ட்** (பாலசிங்கம் கண்ணன் - புத்தூர், மேற்கு)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(சி/4336)

யாழ்ப்பாணம்

# வளைகுடாப் போரில் வெளிவராது மூடிமறைக்கப்பட்ட விடயங்கள்

பாக்தாத்தின் [Baghdad] மீது மேற்கொள்ளப்பட்ட பாலைவனப் புயல் [Desert storm) என அழைக்கப்படும் இராணுவ நடவடிக்கையின் ஒரு ஆண்டு காலம் முடிவுற்ற இன்று, மிக முக்கியமாகக் கருதப்படும் பாரசீகக்குடாப் பிரதேசத்தைச் சீர்குலைக்கக் கூடிய நிலையில் இருந்த திரு. சதாம் குசைன் அவர்களின் ஆற்றல் வெகுவாக அழிக்கப் பட்டுள்ளது. பெரும் அழிவுகளை ஏற்படுத்தக் கூடிய ஈராக்கிய ஆயுதங்கள் அநேகமாக அழிக்கப்பட்டுள்ளன, போர் நடந்திருக்காவிடில் இந்த வேளையில் ஈராக்கிய அறிவியலாளர்கள் அணுகுண்டொன்றைத் தயாரித்திருப்பார்கள் அப்படி ஒரு குண்டை அவர்கள் தயாரித்திருப்பின் அதை திரு. சதாம் குசைன் பயன்படுத்தமாட்டார் என எண்ண முடியாது

வளைகுடாவில் அமெரிக்கா பெற்ற வெற்றி முழுமையானதல்ல. இப்பொழுதும் திரு. சதாம் குசைன் எதிர்ப்புணர்ச்சியைக் காட்டிவருகின்றார். ஈராக்கியத் தலைவரின் பலத்தைச் சீர்குலைப்பதை நோக்கமாகக் கொண்ட அமெரிக்க அதிபர், புலனாய்வுத் துறையினர் மறைமுக நடவடிக்கைகளில் ஈடுபட ஒப்புதல் தந்துள்ளார். திரு. சதாம் குசைன் எதிரணியினரால் வீழ்த்தப் படுவாராகில் இராணுவ நடவடிக்கையைத் தவிர்த்து, மேற்கொள்ளவேண்டிய மற்றைய நடவடிக்கைகளை ஓர் அறிக்கை மூலம் கூட்டுப்படைத் தளபதிகள் அதிபர் புஷ் அவர்களுக்குச் சமர்ப்பித்துள்ளார்கள். எதிரணியினர் திரு. சதாம் குசைனை அவருடைய பதவியில் இருந்து வீழ்த்தும் சாத்தியக் கூறுகள் தென்படவில்லை. அதேவேளையில் அணுவாயுதங்களை தாங்கள் விரைவில் தயாரிக்கப்போவதாக ஈராக்கிய அறிவியலாளர் வெளிப்படையாகவே கூறியுள்ளார்கள்.

ஈராக்கிய போர்க்களத்தில் நடைபெற்ற விடயங்களுக்கும் தொலைக் காட்சியில் காட்டப்பட்ட விடயங்களுக்கும் இடையே பெரும் முரண்பாடு உள்ளமையை ' உண்மையான வெற்றி இன்றியே நாம் ஈட்டிய வெற்றி'' Triumph without Victory) என்ற நூல் வாயிலாகஅறியமுடிகின்றது.

இந்த நூலில் குறிப்பிடப் பட்டிருக்கும் முக்கிய ஆய்வுகளில் சில கீழே தரப்பட்டுள்ளன.

★ திரு. சதாம் குசைனைக் குறிவைத்தே தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன என்ற குற்றச்சாட்டை திரு புஷ் அவர்களின் அரசாங்கம் மீண்டும் மீண்டும் மறுத்த போதிலும் இவரைக் கொல்லும் இறுதி முயற்சியாக போர் நிறுத்தம் ஏற்படுவதற்கு ஒரு சில மணி நேரங்களுக்கு முன் எவ் -111 எவ் (F111F) குண்டு வீச்சு வானூர்திகள் பாக்தாத்துக்கு 15 மைல்களுக்கு அப்பால், வடமேல் பக்கமாக உள்ள ஈராக்கிய இராணுவத்தினரின் பதுங்கு குழிமேல் இதற்கென சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட 500) இறாத்தல் நிறையுள்ளகுண்டுகளைவீசின.

## தீர்மானம்

★ தாக்குதல் நடவடிக்கைகளில் ஆயுதப்படையினரை ஈடுபடுத்த செயலுரிமை அளிக்கும் அமெரிக்கக் காங்கிரசினதும் அதன் அரசியல் யாப்பினதும் செயலுரிமையைப் புறக்கணிக்க வேண்டுமென்ற சூழ்ச்சித் திட்டங்கள் காரணமாகவே ஈராக்குக்கு எதிரான தாக்குதலை மேற்கொள்ள ஐ நா. சபையின் அங்கீகாரத்தை திரு புஷ் நிர்வாகம் பெற்றுக் கொண்டது. முன்னதாகவே ஐ. நா சபைக்கு சென்றதன் மூலம் ஜனநாயக கட்சியினரை சமாளித்து விட்டதாக ஒரு மூத்த நிர்வாக மேலாளர் கூறினார்.

★ தனது அரசைப் பாதுகாக்க அமெரிக்க இராணுவத்தை சவூதிஅரேபியாவுக்கு அழைக்க வேண்டுமென மன்னர் வாகிட் தூண்டப்பட்ட அதே வாரத்தில் அமெரிக்கப் படையணிக்குத் தலைமை தாங்கியஜெனரல்எச் நோமன் சுவாசுகொப Genreal, H Norman Schwarzkepf) அவர்களால் ஈராகிய படையெடுப்புக்கு முன் இரகசியமாக குவைத் நகரத்துக்கு அனுப்பப்பட்ட அமெரிக்க புலனாய்வு மேலாளர் ஈராக்கிய குடியரசுக்காவல் படையினர் சவுதி அரேபியாவின் எல்லையிலிருந்து ஈராக்கின் தென் பகுதியை நோக்கி நகரத் தொடங்கியுள்ளதாக அறிவித்திருந்தார். இந்த புலனாய்வு மேலாளர் ஈராக்கைப்பற்றிய குவைத்தில் வாரக் கணக்கில் தங்கியிருந்து ஈராக்கிய துருப்புக்களின் நடவடிக்கைகளை அமெரிக்காவுக்கு அறிவித்ததன் மூலம் திரு. சுவாத்கோப் அவர்களின் உயிர்நாடியாக விளங்கினார்.

★ அமெரிக்கக் குண்டுவீச்சு வானூர்திகள் முதன் முறையாக பாக்தாத்தின்மீது குண்டு வீசிய 1991 -ம் ஆண்டு ஜனவரி 17-ம்திகதிக்கு முன்னுள்ள சில வாரங்களுக்கு முன், ஈராக்கின் வான்பாதுகாப்புச் சாதனங்களைக் கட்டுப்படுத்தவும் இவற்றுடன் தொடர்பு ஏற்படுத்தவும் அமைக்கப்பட்ட பிரமாண்டமான கணணிகளை செயலிழக்கச் செய்வதற்கு அமெரிக்கப்புலனாய்வுத்துறையினர்அவற்றுள் நுண்அழிவு ஆற்றலை(Computer Virus)மிகவும் சாதுரியமாக உட்புகுத்தினார்கள்.

> பாலைவனப்புயல் என அழைக்கப்படும் இராணுவ நடவடிக்கையின் போது நடந்த உண்மைச் சம்பவங்களை வெளிக்கொணர்வதற்காக அமெரிக்கச் செய்திகளும் உலக தகவலும் என அழைக்கப்படும் அமெரிக்க சஞ்சிகை 600பேர்களைப் பேட்டி காண்கின்றது.

ஈராக்கின் வான்பாதுகாப்பைசீர்குலைப்பதற்கு உருவாக்கப்பட்டஇந்நுண் அழிவு ஆற்றல் தனது கடமையைச் செவ்வனே நிறைவேற்றியுள்ளது.

## போர்த்திட்டம்

★ அமெரிக்காமற்றும் நட்பு நாடுகளின் படைகள் பாக்தாத்துக்குள் நுழைவது மடைமைத்தனம் என சிலர் விமர்சித்த போதும், கூட்டுப்படைகளின் கமாண்டர் ஜெனரல் நோமன் சுவாதகோப் அவர்களின் போர்த்திட்டம் ஈராக்கிய குடியரசு காவல்படையினரை அவர்களின் (Republican Guard) நாப்பிடங்களில் தாக்கி அழிப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்ததுடன் அவருடைய தரைப்படைகள் ஈராக்கிய தலைநகரை நோக்கிச் செல்வதற்குப் பதிலாக பாரசீக குடாவை நோக்கி இழக்குத் திசைக்கு விரைவாக திரும்பிச் செல்லவும் செய்தது. லெப் ஜென பிறடெறிக் பிறாங்சு அவர்களின் தலைமையிலான அமெரிக்க ஏழாவது படைப்பிரிவும், பிரித்தானிய முதலாவது கவச அணியும், பசிறா (Basra) வுக்குத் தெற்காகவும், குவைத் நகருக்கு வடக்காகவும் உள்ள பிசிறா பொக்கற்' (Basra Pocket) றிலுள்ள ஈராக்கிய படைகளின் பெரும் பகுதியினரை மடக்குவதற்கு அத்திட்டம் இடம்கொடுத்தது.

ஆனால் இந்தபோர் நிறுத்தம் திரு பிறாங்க்ஸ் அவர்களின்போர்த்தந்திரத்தைநடைமுறைப்படுத்த தடையாக இருந்தபடியால் பெரும்பாலான ஈராக்கிய குடியரசுப் படைகள் தங்கள் ஆயுதங்களுடன் தப்பிச் சென்றனர்: இப்படிச் சென்ற படையினரை பின்னர் தென் ஈராக்கிலுள்ள ஈராக்கிய சியா(Shiites) இனத்தவர்களினதும் வட ஈராக்கிலுள்ள குர்திஸ் (Kurds) இனத்தவர்களினதும் கிளர்ச்சிகளை அடக்குவதற்கு உதவியாக இருந்தவர்கள் ஆவர். சில மைல்களுக்கு அப்பால் நிலைகொண்டிருந்த அமெரிக்கப் படைகள் உதவிக்குச் செல்ல முடியாதிருந்த அந்த வேளையில கிளர்ச்சிகளில் ஈடுபட்டிருந்த இரு இனங்களையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான கிளர்ச்சியாளர்கள் ஈராக்கிய படைகளால் கொல்லப்பட்டனர் என அறிக்கைகள் கூறுகின்றன

தரைப்போரை 144 மணித்தியாலங்களுக்குப் பின் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற ஜெனரல் சுவாசகோப் அவர்களின் திட்டம் சவுதி அரேபியாவும் எகிப்தும் கொடுத்த நெருக்குதல் காரணமாகவே 100 மணித்தியாலங்களாக மாற்றப்பட்டது. எரிபொருள் தீர்ந்துபோனதன் காரணமாகத் தனது படையினர் திட்டமிட்டபடி முதல் நாள் மாலை தங்கள் குறிக்கோள்களை எட்டமுடியாதிருந்தமையாலேயே மேலும் தரைப் போரை தொடர காலநேரம் கேட்டு திரு. சுவாசு கோப் வேண்டுகோள் விடுத்தார். அமெரிக்க விமானிகள் குவைத் நகரத்திலிருந்து பசிறாவரை தேவையற்ற படுகொலைகளில் ஈடுபட்டுள்ளனர் என அமெரிக்காவிலும் வெளிநாடுகளிலும் எழுந்த குற்றச்சாட்டுகள் காரணமாகவே இங்கு இறந்தவர்களின் தொகை உண்மையாகவே குறைவாகஇருந்த போதிலும் போரை நிறுத்த வேண்டியிருந்தது.

## மேலாண்மை

★ முன்னர் விபரமாகத் தெரிவிக்கப்படாதிருந்தபோதும் தற்போதைய தாங்கிச் சமரை நோக்குகையில் அமெரிக்காவின் தாங்கிகளும் அதன் போர்யுத்திகளும் முன்னாள் சோவியத் ஒன்றியத்தினை விட திறமைவாய்ந்தன என்பதைக் காணமுடிகின்றது. முன்னர் எதிர்பார்க்கப்பட்டது போலன்றி அமெரிக்க எம் 1 ஏ ( Mial ) தாங்கிகள் சுமார் 3200 மீற்றர் தூரத்திலுள்ள ஈராக்கிய ரி - 72 தாங்கிகளை அழித்துள்ளன.

முழுமையாக இந்தப் போரைச் சீர்தூக்கிப் பார்த்தால் வியட்நாமிய அமெரிக்க போரின் பின்னர் துரிதம், தந்திரம் மற்றும் ஏமாற்றல் ஆகியவற்றைக் கையாளும் அமெரிக்காவின் புதிய இராணுவயுக்தி சோவியத் பயிற்சியாளர்களால் போதிக்கப்பட்ட நெருங்கி - மோதல், நேரடி முன்னேற்றம் போன்றவற்றைக் கடைப்பிடிக்க வலியுறுத்தும் ஈராக்கிய யுக்திகளிலும் பார்க்க சிறந்ததென தெளிவாகக் காணக்கூடியதாயிருக்கின்றது.

## குறைந்த அளவினரே

★ வேறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது போல் குவைத் போரில் ஈடுபடுத்தப்பட்ட ஈராக்கிய படைகளின் எண்ணிக்கை அமெரிக்க இராணுவத் தலைமைப்பீடமான பென்ரகன் (Pentagon) கூறியிருந்ததிலும் பார்க்க குறைவானதாகவே இருந்தது. ஜெனரல் சுவாசிகோப் கூறிய தொகையான 632,000 இன் அரைவாசிக்குக் குறைவாகவும் பென்ரகன் மதிப்பீடு செய்த 540,000 க்கு குறைவாகவும் சுமார் 300, 000 படையினரையே போர் தொடங்கும் போது குவைத்தில் ஈராக் ஈடுபடுத்தியது.

இதே போல் இறந்த ஈராக்கியபடையினரின் தொகை அமெரிக்கப் பாதுகாப்புப் புலனாய்வுத்துறையினர் மதிப்பிட்ட 100, 000லும் பார்க்கக் குறைவானதாகவே இருந்தது. 43 நாட்கள் நடாத்தப்பட்ட குவைத் போரில் உண்மையாகவே சுமார் 8000 ஈராக்கிய படைவீரர்களே கொல்லப்பட்டிருக்கலாம் என இப் புத்தகம் கூறுகின்றது.

நன்றி- ஐலண்ட் 17.3.92

# திரைப்படத் தயாரிப்பில் இந்தியா முன்னணியில்

இந்தியா திரைப்பட தயாரிப்பில் உலகத்தில் முதலிடத்தை வகிப்பதாக இந்திய செய்தி ஒலிபரப்புத்துறை ஆண்டறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஆண்டொன்றுக்கு எண்ணூறுக்கும் அதிகமான முழு நீள திரைப்படங்களும் மூவாயிரத்துக்கும் அதிகமான சிறு திரைப்படங்களும் அங்கு தயாரிக்கப்படுவதாக தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை இந்திய திரைப்படப் பிரிவு தயாரித்துள்ள கறுப்பு. வெள்ளை திரைப்படங்கள் பல வர்ணப் படங்களாக மாற்றப்படவுள்ளன. இத்திட்டப்படி வாரத்துக்கு நூறு திரைப்படங்கள் வீதம் வர்ணப் படங்களாக மாற்றப்படும் என இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆப்கான் நெருக்கடி தொடர்பாக

# ஐ.நா. தலைமை செயலாளர் தெஹ்ரானில் பேசினார்

(தெஹ்ரான்)

ஆப்கான் நெருக்கடி தொடர்பாக ஐ நா. தலைமைச் செயலாளர் பூட்ரஸ் காலி ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்

நேற்று முன் தினம் அவர் ஈரானிய ஜனாதிபதி அஸ்செமி ரஸ்பஞ்சானியுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தினார்.

மற்றக் குழுக்களைக் காட்டிலும் அதிகமான ஆதரவையும், ஆதாயத்தையும் எதிர்பார்க்கும் எந்த ஒரு குழுவிற்கும் ஈரான் ஆதரவு அளிக்காதென ஈரானிய ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## சிறுவன் பலி

(டில்லி)

புதுடில்லியிலுள்ள ஜும்மா மசூதிக்கு அருகேயுள்ள பூங்காவில் குண்டு ஒன்று வெடித்தமையால் பதினொரு வயது ஆண் சிறுவன் கொல்லப்பட்டதுடன் மற்றும் ஐந்து சிறுவர்கள் காயமடைந்துள்ளனர். ஞாயிறு காலை நடைபெற்ற இச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் லோகநாயக்ஜெயப்பிரகாஷ் நாராயண் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சிறுவர்கள்கிரிக்கட்விளையாடிக்கொண்டிருக்கும் போது இக் குண்டுவெடிப்பு நடைபெற்றதாகப் பொலிசார் கூறியுள்ளனர்.

## தலாய்லாமாவிற்கு அனுமதி

(டில்லி)

திபெத் நாட்டின் ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா, பிரேஸிலில் நடைபெறும் ஏர்த்மகாநாட்டில் கலந்து கொள்ள விஸா வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர் வரும் யூன் மாதம் ரியோ ரி ஜெனெய் ரோவில் இம் மகாநாடு நடைபெறவுள்ளது.

# எதிர்க்கட்சித் தலைவர்களை விடுதலை செய்துள்ளது

மியான்மா (பர்மா) இராணுவ அரசாங்கம் தான் காவலில் வைத்திருந்தவர்களில் மொத்தம் இருபத்தியாறு எதிர்க்கட்சித் தலைவர்களை விடுதலை செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

கடந்த வியாழனன்று, மியான்மா அரசாங்கம் முன்னாள் பிரதமர் வூன்யூ உட்பட 19 பேரை விடுதலை செய்துள்ளதாக அறிவித்திருந்தது.

நேற்று முன்தினமும் தேசிய ஜனநாயக லீக் காரியதரிசி வூ செக்சியாங் உட்படஏழுபேரை விடுதலை செய்துள்ளதாக மியான்மா வானொலி அறிவித்துள்ளது.

தற்போது வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள அன் சன்சுங்சுகீ தனது வெளிநாட்டிலுள்ள குடும்பத்தவர்களை அழைத்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## அணு உலை விபத்தில் 8000 பேர் பலி

# ஆறு வருடத்தின் பின்னர் வெளியாகிய விபரம்

( செர்னாபில் )

உக்ரையின் நகரமான செர்னாபிலில் ஆறுவருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட அணு உலை விபத்தில் சுமார் 8000 பேர் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து ஏற்பட்டு ஆறுவருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு உக்ரைனியன் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த தகவல் இடம்பெற்றுள்ளது. அத்துடன் கதிர்வீச்சால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆண்டிற்கு ஆண்டு அதிகரித்துவருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தமிழீழம் பற்றி பேசினால் போதாது அதற்காக போராடவும் வேண்டும்

## தந்தை செல்வா நினைவஞ்சலி கூட்டத்தில் யோகி

(நல்லூர்)

''தந்தை செல்வாவின் வாரிசுகள் என்று சொல்கின்றவர்கள் தந்தை செல்வாவை நினைவு கூருகின்றவர்கள், அனைவருமே அவர் தமிழீழம் பெறவேண்டும் என்று விரும்பினர் என்று சொன்னால் மட்டும் போதாது. தமிழீழம் பெற ஆயுதம் ஏந்திப் போராட வேண்டும் என்று தந்தை செல்வா சொன்னதை நினைவில் கொள்ளவேண்டும் என நல்லூரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தந்தை செல்வா நினைவஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயலதிபர் யோகி அவர்கள் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

அவர் அங்கு உரையாற்றுகையில், தந்தை செல்வாவை ஏன் இங்கு நினைவு கூருகின்றோம் என்று கேட்கலாம், தந்தை செல்வாவினுடைய காலத்திற்குப் பின்பு அந்தக் கால ஒட்டத்தில் போராட்டத்திற்கு அவரோடு தோன்றி நின்றவர்கள் - இவர்களை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று தொண்டர்களாகநின்று இந்த மண்ணிற்கு உழைத்தவர்கள். இரண்டு தலைவர்களாக வரவேண்டும் என்று மண்ணைக் காட்டிக்கொடுத்தவர்கள்.

தந்தை சொந்த மகனைப் பெற்றார். தன் மகனைப் போல இன்னொருவரை வளர்த்தார். இரண்டுபேருமே காட்டிக்கொடுத்தார்கள். அதன் விளைவு - அந்த அழிவு இன்னும் எங்களை பாதிக்கிறது

ஒரு மிகப்பெரிய துரோகத்தாசு இந்த மண்ணிலே எல்லோருடைய கண்ணையும் மறைத்த காலம் அந்தத்தூசு அடங்கி, அந்தத் தூசுகளுக்கூடாக ஒவ்வொருவருடைய நடவடிக்கைகள் அந்தக் காலத்திலே அவர்கள் செய்தவை வெளியேவரும். அந்த நேரத்திலே அவர்களை நினைவு கூரவும் அவர்களின் பங்களிப்புக்களை ஏற்றுக்கொள்ளவும் இன்றைய போராட்டம் இன்றைய தலைமை மறக்காது.

மாவீரர்களை பொறுத்த வரையிலும் இதே நிலை தான் மற்றைய குழுக்களிலே இருந்து போராடி இறந்தவர்கள் இருக்கிறார்கள் இவர்களில் யார் துரோகி யார் உண்மையாக நின்று நேர்மையாக நின்று போராடியவர்கள் என்று தெரியாத காரணத்தாலேயே பலருக்கு அவர்களுக்குத் தரவேண்டிய மரியாதையை தரமுடிவதில்லை.

1985ஆம் ஆண்டு தமிழ் நாட்டிலே கூட்டணியைச் சேர்ந்தவர்கள் தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு இலங்கை அரசாங்கத்துடன் பேசி எங்களுக்கு எதிராக நின்ற போதும் கூட நாங்கள் இவர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடாத்தினோம்.

அமிர்தலிங்கம், சம்பந்தர், சிவசிதம்பரம் இவர்களைச் சென்னையிலே இருக்கின்ற எமது தலைமைச் செயலகத்திலே, எமது தலைவர் பிரபாகரன் அவர்கள் சந்தித்தார்கள் அந்தக் காலகட்டம் திம்புப் பேச்சுவார்த்தை முடிந்த ஒரு நெருக்கடியான காலகட்டம்

நாங்கள் சொன்னதெல்லாம் உங்களைகொழும்புக்கு அழைக்கிறார்கள். இந்திய அரசாங்கம் எங்களுக்கு மிகப்பெரிய நெருக்கடியைப் போடுகின்றது நாங்கள் மிழீழக் கோரிக்கையை கைவிட முடியாது உங்களுக்கு தமிழீழ மக்கள் தமிழீழம் என்பதைத் தந்திருந்த போதிலும் கூட நீங்கள் சமஷ்டி என்ற கொள்கையை முன் வைத்து நீண்ட காலமாக போராடியவர்கள்



நீங்கள் எங்களுக்கு செய்ய வேண்டிய உதவி ஒன்று உண்டு அங்கு சென்று சமஷ்டிக் கோரிக்கையை முன்வையுங்கள் எதையும் விட்டுக்தராதீர்கள் சிங்கள அரசு நிச்சயம் இதை ஏற்றுக்கொள்ளாது ஏற்றுக்கொள்ளாத போது இதைக்கூட அவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் எனவே தமிழீழம் தான் வழி என்று திடமாகச் சொல்லுங்கள் என்று அவர்களை கொழும்புக்கு அனுப்பி வைத்தோம்

கொழும்பு சென்று பேசிவிட்டுத் தலைவர் அவர்களைச் சந்தித்த போது. அலாதியாகப் பேசினார்கள். அம்பாறையை விட்டுக் கொடுப்பதாகப் பேசியிருந்தார்கள். சேருவில தொகுதியை விட்டுக் கொடுப்பதாகப்பேசியிருந்தார்கள். ஒர் இன்ஸ்பெக்டருக்கு அதிகாரம் தருவதாகச் சொல்லியிருந்தார்கள் அரை மணித்தியாலம் அமைதியாகக்கேட்ட பிறகு தலைவர் அவர்கள் கேட்டார்கள் சரி பேசினீர்கள் எவ்வளவு உரிமையைத் தருகிறார்கள் என்று. அப்போது அமிர்தலிங்கம் அவர்கள் சொன்னார் ஐந்துவீதம் தருவதாகச் சொன்னார்கள் என்று. சரி, எழுத்தில் ஏதாவது தந்தார்களா? அதுவுமில்லை. அதன்பின்பு தான் இவர்களைத்துரோகிகள்என்று பகிரங்கமாக நாங்கள் சொல்ல வேண்டி வந்தது.

இதை சொல்ல வேண்டிய தேவை ஏற்பட்டது ஏனென்றால், எதிராக நடந்த போதிலும் கூட ஒரு காலகட்டத்திலே நாங்கள் இந்தப் போராட்டத்திற்கு பின்னால் நிற்கக் கூடிய வகையை செய்து கொடுத்த போதிலும் கூட அவர்கள் செய்யவில்லை

இந்த நாட்டினுடைய போராட்டத்திற்கு ஒரு விழிப்புணர்வை தந்தமையும் இந்தப் போராட்டம் குறித்து ஒரு உணர்வை இந்த நாட்டிலே ஏற்படுத்தியமைக்கும் தந்தை செல்வாவுக்கு மிகுந்த இடமுண்டு.

ஒரு போராட்டத்தை முன்னெடுத்துச் சென்ற காரணத்தினாலே - போராட்டம் மிகப் பெரியளவில் எத்தனையோ ஆயிரம் போராளிகளின் இரத்தத்தினால் வளர்த்த காரணத்தினாலே இன்று தந்தை செல்வாவைப் பற்றிப் பேச வந்தபோது அவருக்கு மரியாதை இருக்கிறது அவர் நின்ற செய்த செயலுக்கு மரியாதை இருக்கின்றது.

உண்மையிலே போராடிய தலைவர்களுக்கு மதிப்பளிக்கும் அதே வேளையில் தலைவர் என்று கூறிக்கொண்டவர்களைப்பற்றி அண்ணன் காசி ஆனந்தன் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். ''அன்று தலைவர்கள் மேடையிலே வீற்றிருந்த காலம் இன்று தலைவர்கள் பாடையிலே போகும் காலம். அன்று தலைவர்கள் நீண்ட காலம் உயிரோடு வாழ வேண்டும் என்று பிரார்த்தித்தோம். இன்று எமது போராட்டத்தில் ஒரு போராளியை தலைமை பார்த்து நீ போ, போய்ச்சா என்று சொல்லுகிற காலம்''

இந்தக் கால மாற்றத்தில் நின்றுகொண்டு தந்தை செல்வாவைப் பார்க்க வேண்டும்.

இங்கே போராட்டம் உங்களுக்காக காத்து நிற்கிறது. இந்த மண் எங்களின் இரத்தத்தால் நனைய வேண்டும். இந்த மண் எங்களின் இரத்தத்தால் மீண்டும் விடிவு பெற வேண்டும். அந்த நிலைக்கு நாங்கள் எல்லோரும் ஒருமித்த எழுச்சி பெற்று போராட வேண்டும் என்று தெரிவித்தார்.

---

# இறைபணியுடன் கலை வளர பாடுபடும் மன்றம்

## -- கலாநிதி பாலசுந்தரம் பாராட்டு

(குருநகர்)

1990 ஜூனில் சிங்கள பேரினவாத அரசின் ஆக்கிரமிப்புப் படையினர் தமிழ் மக்களுக்கு எதிராகத் தொடுத்த போரில் நாசம் செய்யப்பட்ட யாழ்நகரத்தில் தமிழ்க் கலையை இறைபணியுடன் வளர்த்துக் கொண்டிருக்கும் திருமறைக்கலா மன்றத்தின் அரங்கும் அந்த அழிவுகளின் சுவடியாகத் திகழ்கிறது.

இவ்வாறு கலாநிதி இ.பாலசுந்தரம் கூறினார்.

யாழ். ஆயர் வ தியோகுப்பிள்ளை ஆண்டகையின் வெள்ளி, பொன், பவளவிழா நிகழ்ச்சித் தொடரில் திருமறைக்கலாமன்றம் எடுத்துச் சிறப்பிக்கும் முத்தமிழ் விழா வெள்ளியன்று (24-4-92) மாலை கோலாகலமாக ஆரம்பமாகியது.

கலாநிதி இ.பாலசுந்தரம் விழாவில் சிறப்புரை நிகழ்த்துகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

ஈழ நல்லூர் நாதஸ்வரவித்துவான் பி.எஸ்.பிச்சையப்பா குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பமான முத்தமிழ் விழாவின் முதல் நாள் நிகழ்ச்சிகளுக்கு உள்ளூராட்சிஉதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாலா தலைமை வகித்தார்.

கலாநிதி இ. பாலசுந்தரம் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:

யாழ் நூலகம் இந்த மண்ணில் சிங்களப் பொலிஸ் காடையர்களால் தீக்கிரை செய்யப்பட்டதைக் கேள்வியுற்றதும் தன்னுயிரை நீத்தவர் தாவீது அடிகள் அவரது திருநாமத்தை இன்றைய முத்தமிழ் விழா அரங்கிற்கு இட்டுச் சிறப்பித்துள்ளமை கடந்தகால வரலாற்றை நினைவு கூர வைப்பதாகவும் அமைந்துள்ளது என்றார்

திரு க. சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்களும் இயற்றமிழ் அரங்கில் சிறப்புரை வழங்கினார்

இசைத்தமிழ் அரங்கில் கலைமாமணி திருமதி அன்னலட்சுமி தனபாலசிங்கத்தின் இன்னிசைக் கச்சேரி இடம்பெற்றது. அரக்கனை வென்ற அருட்செல்வன் என்னும் நாட்டிய நாடகத்தைத்தொடர்ந்து விழாவின் இறுதி நிகழ்ச்சியாக கம்பன்கழக இ. ஜெயராஜ் குழுவின் வழக்காடு மன்றம் இடம்பெற்றது. (21)

# இசை நிகழ்ச்சி

## பின்போடப்பட்டுள்ளது

பருத்தித்துறை பழைய பஸ் நிலைய மைதானத்தில் முத்தமிழ்விழா நிதிக்காக நடத்தப்படவிருந்த சாந்தன் குழுவினரின் இசைநிகழ்ச்சியும் சந்தனக்காடு நாடகமும் மறுஅறிவித்தல் வரும்வரை பின்போடப்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் வடமராட்சிப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

# யுத்தம் நீடிக்கும் தேவை யாருக்கோ இருக்கிறது

## பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு யுத்தம் தற்போது பிச்சைக்காரனின் புண் என்பதை விட பிச்சைக்காரனின் கருப்பட்டி என்று கூறுவதே பொருத்தமானதாகும் என்று இராணுவத்தினர் கூறுகின்றனர். அந்தளவுக்கு யுத்தத்தை நீடிப்பதில் ஆர்வம் காட்டப்படுகிறது என மக்கள் ஐக்கிய முன்னணி எம்.பி பந்துலகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு யுத்தத்தை எப்போதோ முடிவுக்குக் கொண்டு வந்திருக்கலாம். ஆனால் யுத்தம் நீடிக்கிறது. அவ்வாறு அதை நீடிக்க வேண்டிய தேவை யாருக்கோ இருக்கிறது என மேலும் அவர் தெரிவித்தார்.

# நீரிழிவு நோய் பற்றிய கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கை யோகாசன ஸ்தாபனத்தின் சார்பில் நீரிழிவு நோய் பற்றிய கருத்தரங்கும், அந்நோயைக்குணப்படுத்த செய்யவேண்டிய யோகாசன செய்முறைப்பயிற்சியும். யோக சிகிச்சைமுறை பற்றிய கருத்தரங்கும். மே மாதம் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 30மணி தொடக்கம் 6 30 மணி வரை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் 238 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள திருமறைக்கலா மன்ற கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

யோகாசனக் கலாநிதியும். அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனத்தின் இயக்குனருமான ஸ்ரீ சிதானந்த சரஸ்வதி யோகி அவர்களும், பல யோகாசன நிபுணர்களும் இக் கருத்தரங்கில் கலந்துகொண்டு நீரிழிவைக் குணப்படுத்தும் யோக சிகிச்சை பற்றியும், யோகாசன செய்முறைப் பயிற்சி பற்றியும் கருத்துரை வழங்குவார்கள்.

# வடமராட்சியில் மேதின ஏற்பாடுகள்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சியில் 'மே' தின ஏற்பாட்டுக் கலந்துரையாடல்களும், பிரசாரத் தெருக்கூத்துக்களும் கிராமம் கிராமமாக நடத்தப்பட்டு வருகின்றன.

வடமராட்சி விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக் கழகமும், தமிழீழ விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பும், தனித்தனியே தெருக் கூத்து நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றன. (36)

## வரலாற்றுச் சான்றுகளை

# ஆவணப்படுத்துவதற்கு ஆய்வு நிறுவனம் முயற்சி

[யாழ்ப்பாணம்]

தொல்பொருள்முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்றுச்சான்றுகள் கவனிப்பாரற்ற நிலையில் அழிந்துவருவதால்இவற்றைத தமிழீழம் இழந்து விடக்கூடிய நிலை உருவாகியுள்ளது இதனால் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின், கட்டடங்களின் மாதிரிப் படங்கள், கிடைத் தோற்ற, பக்கத் தோற்ற வரைபடங்கள் போன்றவற்றை வரைந்து கோவைப்படுத்தும் முயற்சியில் தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் அங்கமாகிய தேச நிர்மாணிகளின் பொறியியல் மதியுரையகம் செயற்பட்டு வருகிறது.

இம் முயற்சியின் கீழ் நல்லூரை மத்தியாகக் கொண்ட கலாசார பிரதேசத்திற்குட்பட்ட சங்கிலி மன்னன் தோப்பு அளவீடு செய்யப்பட்டு இதற்கான மாதிரிப் படம் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் சரித்திர தொடர்புள்ள நீர் நிலையான யமுனா ஏரி பற்றிய மாதிரிப்படங்கள் அமைவிடப் படங்கள் என்பனவும் தயாரிக்கப்பட்டுள்ளன. அத்துடன், நல்லூர் கலாசார பிரதேசத்திற்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள மந்திரிமனை பற்றிய அளவீடுகளும் மாதிரிப் படங்களும் தயாரிக்கப்படவுள்ளன.

# வீரவேங்கை தபேந்தினிக்கு மக்கள் அஞ்சலி

வீரவேங்கை தபேந்தினியின் (பூபாலசுந்தரம் மஞ்சுளா தேவி) புகழுடம்புக்கு பெருந்தொகையான மக்கள் குழுமி வந்து அஞ்சலி செலுத்தினார்கள்.

கடலில் ஏற்பட்ட விபத்து ஒன்றில் வீரச்சாவினைத் தழுவிக்கொண்ட தபேந்தினியின் புகழுடம்பு மாமுனை தமிழ் கலவன் பாடசாலையில்நேற்று முன்தினம் (ஞாயிறு) மாலை பொதுமக்களின்அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வடமராட்சி மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

கடற்புலி மகளிர் படைப்பிரிவைச் சேர்ந்தசெல்வி அரசிலா, திரு அரியகுமார் ஆகியோர் அஞ்சலிஉரையாற்றினார்கள்.

## சிந்தனைக்கு

உபதேச மொழிகளை விட, முன் மாதிரிகள், மனத்தில் பலமாகப் பதிகின்றன.

—ஹென்ரி ஃபீல்டிஸ்

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 28-04-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 023-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 03

# ஏன் மனமாற்றம்?

தமிழ் மக்களின் அவல நிலையை சிறிலங்கா அரசாங்கத்திற்கும், சிங்கள மக்களுக்கும் எடுத்துக் கூறி தமிழ் மக்களின் துயர்துடைக்க தம்மாலான முயற்சிகளை எடுக்கப் போவதாகவும் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவையும், மற்றும் முக்கிய அமைச்சர்களையும் சந்தித்து ஓர் போர் நிறுத்தத்தைக் கொண்டு வர ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொள்ளப் போவதாகவும் பௌத்த நல்லெண்ணத்தூதுக்குழுவினர் யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும் முன்னர் நடந்த சந்திப்பின் போது தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் வந்து திரும்பிய நல்லெண்ணக் குழுவினரில், யுத்த நிறுத்தத்தைச் சிறிலங்கா ஜனாதிபதியிடம் கோரப்போவதாகத் தெரிவித்துள்ள முதலாவது தூதுக்குழு அல்ல இது யாழ்ப்பாணம் வந்து திரும்பிய சர்வதேச நல்லெண்ணக் குழுவினரும் சரி, கத்தோலிக்க கிறிஸ்தவ நல்லெண்ணக் குழுவினர்களும் சரி இவ்வாறே தெரிவித்தனர். அதன்படி கொழும்பு சென்றதும் தமிழ் மக்களின் கஷ்டங்களையும், துன்பங்களையும் சிறிலங்கா ஜனாதிபதிக்கு எடுத்துக்கூறியிருப்பதோடு யுத்தநிறுத்தத்தையும் கோரி இருந்தனர்.

மேலும், தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கு தமிழர்களின் அபிலாசைகளைத் தீர்க்க கூடிய பொருத்தமான தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைத்து பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர். கடைசியாக வந்துசென்ற பௌத்த நல்லெண்ணத் தூதுக்குழுவினர் தாம் கொண்டு வந்த தீர்வுத்திட்டம் பொருத்தப்பாடு அற்றது எனவும். இதைவிட முன்னேற்றகரமான தீர்வுத்திட்டம் வைக்கப்பட வேண்டும் எனவும். அடுத்த தடவை நாம், யாழ். வரும்போது முன்னேற்றகரமான தீர்வுத்திட்டத்துடன் வருவதாகவும் தெரிவித்துச் சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் வந்ததும், அல்லது விடுதலைப் புலிகளைச் சந்தித்ததும் இவ்வாறெல்லாம் சமாதான நல்லெண்ணத் தூதுக்குழுக்கள் ஏன் தமிழருக்காகப் பேச வேண்டும் மனம் மாறவேண்டும். விடுதலைப் புலிகளுக்குப் பயந்தா? அல்லது அவர்களின் வற்புறுத்தலாலா?

அவ்வாறு எதுவுமில்லை. அவர்கள் இங்கு வந்த பின்னர்தான், உண்மையான நிலைவரத்தை அறிந்து கொள்கின்றார்கள். தமிழரின் பிரச்சினைகளைப் புரிந்துகொள்கின்றார்கள். விடுதலைப் புலிகள் ஓர் பயங்கரவாதிகள். தமிழ் மக்களை துப்பாக்கி முனையில் அடக்கி வைத்துள்ளார்கள், பேர் முனைக்கு சிறுவர்களைத் துப்பாக்கி முனையில் இழுத்துச் செல்கின்றார்கள் எனச் சிறிலங்கா அரசாங்கம் கூறுவது யாவும் பொய். தமிழ் மக்கள் தமது உரிமைக்காகப் போராடும் புலிகளின் பக்கம் நிற்கின்றார்கள். புலிகளின் ஆயுதப் போராட்டம் ஒரு பயங்கரவாதப் பிரச்சினையல்ல, ஒரு தேசிய இனத்தின் பிரச்சினை எனப் புரிந்து கொள்கின்றார்கள்.

யாழ்ப்பாணம் வந்த பிக்குகளின் குழு, இதனை வெளிப்படையாகவே தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியின்போது குறிப்பிட்டது. 'யாழ்ப்பாணமக்கள், இவ்வளவு முகமலர்ச்சியுடன் தம்மை வரவேற்பார்கள் என நாம் எதிர்பார்க்கவில்லை; அத்தோடு, விடுதலைப் புலிகளுடன் இவ்வளவு ஒட்டி உறவாடுவார்கள் எனவும் நாம் நினைக்கவில்லை' என்று. பௌத்த குழுவினருக்கும், இதற்கு முன்னர் யாழ். வந்த நல்லெண்ணக் குழுவினருக்கும் மனமாற்றத்தை ஏற்படுத்திய விடயம் இதுதான். அதாவது சமாதானக்குழுவினர் கேட்டதற்கும், காண்பதற்கும் இடையில் பாரிய வேறுபாடு.

மற்றும், விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்திற்கும், சமாதானத்தீர்விற்கும் எப்பொழுதும் தயாராகவே உள்ளனர். இந்நிலையில் ஒரு யுத்த நிறுத்தம் ஏற்பட்டு, சமாதான முயற்சிகள் தொடர வேண்டுமானால் அது அரசாங்கத்திடம் வற்புறுத்த வேண்டுமே ஒழிய புலிகளிடம் வற்புறுத்த வேண்டியது அல்ல என உணர்ந்துள்ளனர்.

ஆனால், இவை யாவும் இங்குவரும் சமாதான, நல்லெண்ணக்குழுக்களுக்குத் தெரியாமல் இருப்பது போல், சிறிலங்கா அரசிற்கும் தெரியாமல் இல்லை. ஆனால், இவையாவற்றிற்கும் எதிராகப் பிரசாரம் செய்கின்றது. வடக்கே வாருங்கள், மக்களின் பிரச்சினைகளையும், அவர்களின் உணர்வுகளையும் புரிந்து கொண்டு சமாதானத்திற்கான ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வையுங்கள் என்ற புலிகளின் கோரிக்கையை அரசாங்கம் ஏற்க மறுக்கின்றது. வடக்கே சென்றால், தமிழரின் நியாயபூர்வமான கோரிக்கைகளை ஏற்கவேண்டிவரும் என அஞ்சுகின்றது. இந்நிலையிலேயே பாராளுமன்றத் தெரிவுக்குழுவினரோ அரசாங்கக் கட்சியினரோ யாழ் வர அஞ்சுகின்றனர்.

சார்க் மாநாட்டின் போது

# 'எமது கௌரவத்தை பாகிஸ்தான் காப்பாற்றியது'

- அமைச்சர் மன்சூர்

(கொழும்பு)

'கடந்த பல வருடங்களாக இலங்கை, பாகிஸ்தான் உறவு நெருக்கமடைந்து வருகிறது. அதனை உறுதிப்படுத்தும் வகையில் பாகிஸ்தானின் அனைத்துப் பிரதமர்களும், இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர். 'சார்க்' மாநாட்டின் பொழுது இன்றைய பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷெரீப் இலங்கைக்கு விஜயம் செய்து எமது கௌரவத்தை காப்பாற்றினார். அதனை எம்மால் மறக்க முடியாது'.

இவ்வாறு வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஏ. ஆர் மன்சூர் தெரிவித்துள்ளார். விருந்துபசார வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் எமது நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தது முதல் பாகிஸ்தானுடனான நல்லுறவு நெருக்கமடைந்து வருகிறது. வர்த்தகத்தைப் பொறுத்தவரைக்கும் இலங்கை - பாகிஸ்தான் வர்த்தகம் அபிவிருத்தி அடைந்து வருகிறது.

மேலும் இலங்கைத் தேயிலையை பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்வது தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்தி வருகிறார் எமது அமைச்சர் ஒருவர், என்றும் அவர் குறிப்பிட்டார்.

தனியார் மயமாக்கலை எதிர்த்து

# தொழிற் சங்கங்கள் 29 முதல் வேலைநிறுத்தம்

(கொழும்பு)

தேயிலைத் தோட்டங்களைத் தனியார் மயமாக்கும் அரசின் திட்டத்தை எதிர்த்துத் தொழிற்சங்கங்கள் வரும் 29 ஆம் திகதி அடையாள வேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள இருக்கின்றன.

ஆனால், அமைச்சர் எஸ். தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசு தோட்டங்களைத் தனியார் மயமாக்குவதை வரவேற்கிறது.

தனியார் மயப்படுத்தலால் தேயிலைத் தோட்டங்களில் ஆள் குறைப்பு நடவடிக்கை எடுக்கப்படாது என்று அரசு மீண்டும் மீண்டும் வலியுறுத்தினாலும் எதிர்க்கட்சித்தொழிற் சங்கங்கள் நம்புவதாக இல்லை என்பது குறிப்பிடத் தக்கது.

# ஐ.தே.க. செயற்குழுவுக்கு கூடுதலான அதிகாரங்கள்

(இரத்தினபுரி)

ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்குழுவிற்கு, தேசிய நிர்வாக குழுவின் கடமைகள், அதிகாரங்கள், செயற்பாடுகள் அனைத்தையும் செய்வதற்கு அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது.

இவற்றை செயற்குழுவிற்கு வழங்கும் தீர்மானம் கடந்த சனியன்று இரத்தினபுரியில் நடைபெற்ற ஐ. தே. கவின் தேசிய நிர்வாக குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

'சார்க்' வெளியுறவுச் செயலாளர்களின்

# நிலையியற்குழுக் கூட்டம் நேற்று ஆரம்பமாகியது

(கொழும்பு)

'சார்க்' வெளியுறவுச் செயலாளர்களின் நிலையியற் குழுவின் மூன்று நாள் விசேட கூட்டம் நேற்று கொழும்பில் ஆரம்பமாகியது.

'சார்க்' நாடுகளின் இடைக்கால ஒரு நாள் உச்சிமாநாடு நடத்துவது பற்றி அமைப்பின் தற்போதைய தலைவர் பிரேமதாசா சமர்ப்பித்திருக்கும் ஆலோசனை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

'சார்க்' அமைப்பைசுறுசுறுப்பாக இயங்க வைப்பதற்கும், அதன் செயலகம், தொழில்நுட்பக் குழுக்கள் ஆகியவற்றிற்கு உந்து சக்தி அளிக்கவும் சர்வதேச ஸ்தாபனங்களுடன் ஒத்துழைப்பை வளர்க்கவும் இத்தகைய இடைக்கால உச்சி மாநாடு அவசியம் என சிறிலங்கா ஜனாதிபதிபிரேமதாசா தெரிவித்துள்ளார்.

'சார்க்' அங்கத்துவ நாடுகளுக்கிடையே பயண அனுமதி விலக்களிக்கும் திட்டம் பற்றியும் இக் கூட்டங்களில் ஆராயப்படவுள்ளது.

# பிக்குகளை தொண்டர் ஆசிரியர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் பௌத்த மதகுருமாரின் நல்லெண்ணத் தூதுக்குழுவினரைச் சந்தித்த தொண்டர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் இங்குள்ள நிலைமைகளை எடுத்து விளக்கியதுடன் சிறிலங்கா ஜனாதிபதிக்கான மகஜரொன்றையும் அவர்களிடம் கையளித்தனர்.

முகாமைத்துவம் மாறிய பின்

# தோட்ட லயன்களை கவனிப்பது யார்?

(கொழும்பு)

தோட்டங்களின் முகாமையை தனியாரிடம் ஒப்படைத்த பின்னர் தோட்ட லயன்களைக்கவனிக்கப்போவதுயார்? இவ்வாறு கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் வரிமன்னிப்பு சட்டமூலத்தின் விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய சுதந்திரக்கட்சி எம்.பி அத்தாவுட செனவிரத்ன எம். பி. தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் தோட்டங்களின் முகாமையைத் தனியாரிடம் ஒப்படைக்கப் போகிறீர்கள். தோட்டத் தொழிலாளர் வசிக்கும் லயன் வீடுகளின் நிலை மிகவும் மோசமானது. ஓர் அறை கொண்ட இந்த வீடுகளில் வசதிகள் கிடையாது. மழை பெய்தால் லயன் வீடுகள் ஒழுகும்நிலையிலேயே உள்ளன.

இந்த வீடுகளுக்கான மலசல கூடம் இல்லை. இப்போதே நிலைமை இப்படியென்றால் தோட்டமுகாமை ஒப்படைக்கப்பட்டபின் லயன் வீடுகளை, மலசல கூடங்களைக் கவனிக்கப் போவது யார்? எனவே தோட்டங்களின் முகாமைமாறிய பின் தோட்டத்தொழிலாளர் கஷ்டப்படப் போகிறார்கள் எனவும் தெரிவித்தார்.

# குமணவில் வந்த தபால்கள் நாளை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் பருத்தித்துறையை வந்தடைந்த 'குமண' கப்பலில் 290 தபால் பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளன. இத்தபால் பொதிகள் இன்று யாழ்ப்பாணம் எடுத்து வரப்படும்.

எடுத்து வரப்படும் தபால் பொதிகள் யாவும் உடனடியாகதரம்பிரிக்கப்பட்டு புதன். வியாழன் ஆகிய நாட்களில் விநியோகிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது (பா)

# தமிழர் முஸ்லிம் இணைந்து தீர்வைத் தரவேண்டும்

- பிரேமா

(கொழும்பு)

தமிழ் முஸ்லிம் கட்சிகள்ஒன்றிணைந்து வட - கிழக்கு பிரச்சினைக்கான தீர்வை முன்வைத்தால் அதனை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கத்துக்கு எதுவித தடங்கலுமில்லை என சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்,

இது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவரையும் அழைத்து இருதரப்பினரும் இணைப்பு தொடர்பாக ஒருமித்த கருத்தை முன்வைத்தால் அதை அமுல்படுத்துவதில் பிரச்சினைகள் எழாது எனக் குறிப்பிட்டார்.

# ஆசிரிய மாணவர்கள் ஒன்றுகூடவும்

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்கள் அனைவரும் வரும்வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00மணிக்கு கலாசாலையில் ஒன்று கூடுமாறு ஆசிரியர் ஒன்றியத் தலைவர் கு இரவீந்திரன் வேண்டியுள்ளார்.

## இன்றைய உதைபந்தாட்டப் போட்டி

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் பதினொரு பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வலிகாமம் கிழக்கு பிரிவுக்கான விலகல் முறையிலான குழுநிலை இறுதிப் போட்டியில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென் நிக்களஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

# தமிழ்நாடு சட்ட சபைக்கும் உயர்நீதிமன்றிற்கும்பிணக்கு

### பத்திரிகையாளர் விவகாரம் சூடுபிடிக்கிறது

தமிழக சட்டப் பேரவையின் விசேட கூண்டில் ஏற்றி கண்டனம் தெரிவிப்பதற்காக பத்திரிகையாளர்கள் சிலரைக் கைது செய்யும்படி தமிழக சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா பிறப்பித்த உத்தரவைத் தொடர்ந்து உயர் நீதிமன்றத்திற்கும், தமிழ்நாடு சட்டப் பேரவைக்கும் இடையே பிணக்கு எழுந்துள்ளது.

பத்திரிகையாளர் கே. பி. சுணில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவொன்றையடுத்து சட்டப் பேரவையின் உத்தரவைஇடை நிறுத்தி வைக்கும்படி உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

ஆனால் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு சட்டசபையின் இறையாண்மையில் தலையிடுவதாகக்கூறியிருக்கும்சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா, சட்டசபை பிறப்பித்த உத்தரவை நிறைவேற்றும்படி காவல்துறையைப் பணித்துள்ளார்.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது.

முரசொலி ஆசிரியர் செல்வத்தையும், கோவை மாலை முரசு ஆசிரியர் சுந்தரையும் கைது செய்வதற்கு தமிழக சட்டப் பேரவைச் சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா கட்டளை பிறப்பித்துள்ளார்

இலஸ்ரேட்டட் வீக்லி ஒப் இன்டியா சஞ்சிகையின் முன்னாள் பத்திரிகையாளர் கே. பி. சுணிலைக் கைது செய்வதற்கு முன்னர் பிறப்பிக்கப்பட்ட கட்டளை ஒன்று இந்திய உச்ச நீதிமன்றம் விதித்திருக்கும் இடைக்காலத் தீர்ப்பு சட்டப் பேரவையைக் கட்டுப் படுத்தாது என்று திட்டவட்டமாக சபாநாயகர் தெரிவித்திருக்கிறார்.

பேரவையில் மன்னிப்பு வழங்கப்பட்ட போதும் இந்த மாதம் 25ஆம் திகதி இலஸ்ரேட்டட் வீக்லி இதழில் தமிழகச் சட்டப் பேரவையை இழித்தும், பழித்தும் எழுதிய அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் சுணில் பாஸ்கர் மீது இன்று பேரவையில் உரிமைப் பிரச்சினை கொண்டு வரப்பட்டது. உரிமைப் பிரச்சினை மீது இன்று தீர்ப்பு வழங்குவதாகச் சபாநாயகர் தெரிவித்தார்.

முரசொலி ஆசிரியரும் கோவை மாலை முரசு ஆசிரியரும் அவையின் உரிமையை மீறியதற்குஉரிமைக்குழுவிடம் மன்னிப்பு கேட்காததால் அவர்களைச் சட்டப் பேரவைக்குக் கொண்டு வந்து கூண்டில் ஏற்றித் தண்டிப்பதற்காக நேற்று அவர்கள் இருவரும் பேரவைக்கு வர வேண்டும் என்று தாம் விடுத்த ஆணைப்படி அவர்கள் வராததை சபாநாயகர் சுட்டிக் காட்டினார்.

உச்ச நீதி மன்றத்தில் இது தொடர்பாக நேற்று வழக்கிருந்ததால் அவைக்கு வர முடியவில்லை என்று இருவரும் காரணம் காட்டி கடிதம் எழுதியிருந்தார்கள். ஆனால் உச்ச நீதி மன்றம் பேரவையின் நடவடிக்கைகளில் தலையிட முடியாதுஎன்பதால், இவர்கள் விவாதம் ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்த சபாநாயகர், முரசொலி ஆசிரியருக்கும் மாலை முரசு ஆசிரியருக்கும் எதிராகவும் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டது என்றார்.

உச்ச நீதி மன்றத்திடமிருந்து இந்த வழக்குத் தொடர்பான கட்டளை எதையும் ஏற்றுக் கொள்ள வேண்டாம் என்று சபாநாயகர் சட்ட சபையின் செயலருக்கும் தமிழ் நாடு பொலிஸ் கமிஷனருக்கும் உத்தரவிட்டுள்ளார்.

## ஆயர் தியோகுப்பிள்ளை கௌரவிக்கப்பட்டார்

(குருநகர்)

யாழ். திருமறைக் கலாமன்றம் நடந்த மூன்று தினங்கள் (24 25-26 ஆம் திகதிகள்) பிரதான வீதி கலையரங்கில் நடத்திய முத்தமிழ் விழா இறுதிநாளான ஞாயிறன்று யாழ். ஆயர் மேதகு, கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை கௌரவிக்கப்பட்டார்.

அவர் யாழ். ஆயராகி 25 ஆண்டுகளை நிறைவு செய்வதால் வெள்ளி விழாவாகவும் குருப்பணிக்குத் தம்மை அர்ப்பணித்து ஐம்பது ஆண்டுகளாவதால் பொன் விழாவாகவும் வயது 75 - ஆவது குறித்து பவள விழா ஆண்டாகவும் யாழ். கத்தோலிக்க மக்கள் இவ்வாண்டைச் சிறப்பித்து இருப்பது அறிந்ததே.

ஆயரின் வெள்ளி, பொன் பவள விழாக் கொண்டாட்டங்களுக்கு முன்னோடியாக யாழ். திருமறைக்கலாமன்றம் மூன்று தினங்கள் முத்தமிழ் விழாவெடுத்துச் சிறப்பித்துள்ளது.

அன்றைய (26-4-92) தினம் யாழ். ஆயர் மங்கள வாத்தியங்கள் முழங்க மக்கள் மலர் அள்ளித்தூவ விழா மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

திருமறைக் கலாமன்றத்தின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லை விழா நாயகனான அவர் நாட்டி வைத்தார்.

யாழ் அரச அதிபர் திரு. எம் மாணிக்கவாசகர் தலைமையிலான கௌரவித்தல் நிகழ்ச்சியில் திருமதி ம. மரியநாயகி (நவாலியூர் நாயகி) கவிஞர் யாழ் ஜெயம், திரு. த. பரமலிங்கம் (நவாலியூர்க் கவிராயர்) ஆகியோர் பாமாலை சூட்டி ஆயரைக் கௌரவித்தனர்.

கடற்புலிகள் யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு ஸ்ரனி மாஸ்டர் ஆயரின் பணிகளைப் பாராட்டிப் பேசினார்.

பேராசிரியர் திரு. அ. சண்முகதாஸ், விரிவுரையாளர் எஸ். சிவலிங்கராசா ஆகியோர் பேருரைகளை நிகழ்த்தினர். கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. விழாவின் இறுதி நிகழ்ச்சியாக திருமறைக் கலாமன்றத்தின் 'சிந்தாமணி' காப்பிய நாடகம் இடம் பெற்றது. திரு. அ பிலிப்பையா நன்றி தெரிவித்தார். (21)

## மகரகம குண்டு வெடிப்பு; தேடப்பட்ட பெண் கைதாம்

(அம்பாறை)

அம்பாறை, மகரகம குண்டு வெடிப்புகள் தொடர்பாக சிறிலங்கா பொலிசாரால் தேடப்பட்டு வந்த மேரி என அழைக்கப்படும் பெண் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பெண் மகரகமவில் குண்டு வைக்கப் பயன்பட்ட காரில் வந்து வத்தளையில் இறங்கியவர் என சிறிலங்கா பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர் கடந்த சனிக்கிழமை அம்பாறையில் வைத்து கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஐந்து லட்சம் பேருக்கு அடையாள அட்டைகள்

(கொழும்பு)

ஆட்களை பதிவு செய்வதற்கான திணைக்களம் ஐந்து லட்சம் பேருக்கு புதிய அடையாளஅட்டைகளை வழங்கவுள்ளதாக தெரிவித்துள்ளது.

இவர்களுடைய அடையாள அட்டைகள் நாட்டில் பிரச்சினைகள் ஏற்பட்ட போது தொலைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

இவ்வாறு பாதிக்கப்பட்ட மேலும் இருபதினாயிரம் பேருக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படவிருப்பதாக ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

### க. பொ. த.

மே மாதம் பத்தாம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

இதேவேளை விண்ணப்பதாரிகள் தாம் மீளாய்வு செய்ய விரும்பும் ஒவ்வொரு பாடங்களுக்கும் தனித்தனி விண்ணப்பப் படிவங்களை அனுப்புவதுடன் ஒவ்வொரு பாடத்திற்கும் ஐம்பது ரூபா பெறுமதியான முத்திரையை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி அனுப்புதல் வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது (ச)

### திராய்

பூபாலபிள்ளை அரியன், வடிவேலு மயிலன், வடிவேல் விநாயகமூர்த்தி, சின்னத்தம்பி நடராசா, தம்பிமுத்து கிருஷ்ணகுமார், சின்னக்குட்டி பாலசுந்தரம், பெரியான் பொன்னுத்துரை, அரியரட்ணம் நவரட்ணம், நவரட்ணம் யோகன், சிதம்பரம் தம்பிப்பிள்ளை ஆகியோரே இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்களாவர்.

### இந்தியாவுக்கு

தீர்வுகாணும் நோக்கத்தோடு அரசாங்கம் ஏனைய நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது. இதன் மூலம் நாட்டிலே பயங்கரவாதம் மீண்டும் தலை தூக்காமல் செய்து விட முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

### கண்ணியில்

இதனையடுத்து பிற்பகலில் பதினொராம் கட்டை என்னுமிடத்தில் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் இரு தடவைகள் கண் மூடித்தனமான குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன. அவ்ரோ விமானம் ஒன்றும், இருகுண்டு வீச்சு விமானங்களும், உலங்கு வானூர்தியும் தாக்குதல்களை நடத்தின.

முதலில் தாக்குதல் நடத்தி விட்டுச்சென்ற இவ்விமானங்கள் பின்னர் ஒரு மணித்தியாலத்தின் பின் மீண்டும் வந்து தாக்குதல்நடத்தின.

### மீனவர்களை

இவர்கள் மீன் பிடித்துக் கொண்டு கடந்த இருபத்தோராம் திகதி கிரிக்குடாவில் இருந்து யாழ். நகரை நோக்கித் திரும்பினர்எனவும் தெரிவிக்கப்படுகிறது

### வன்னி

ருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஒருவார காலமாக வவுனியா, அநுராதபுரம் ஆகிய பகுதிகளில் இருந்து அப்பகுதிக்கு கனரக வாகனங்களும், துருப்புக்களும் அனுப்பப்பட்டு வருகின்றன.

இதேவேளை நேற்றுக் காலை6-00 மணியில் இருந்து கால வரையற்ற ஊரடங்கு உத்தரவை சிறிலங்கா அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது கடந்த இருதினங்களுக்கு முன்னரும் சிறிலங்கா அரசாங்கம் ஊரடங்கை அறிவித்த போதும் படை எடுப்புக்கள் எதையும் நடத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### தமிழக சட்டப் பேரவை

## கூட்டத்தைப் பகிஷ்கரிக்க பத்திரிகையாளர் கோரிக்கை

தமிழ் நாடு சட்டப் பேரவையில் இன்றைய கூட்டங்களைப் பகிஷ்கரிக்குமாறு நான்கு பத்திரிகையாளர் ஸ்தாபனங்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றன.

இலஸ்ரேட்டட் விக்கிலியின் முன்னாள் நிருபருக்கு எதிராகவும், முரசொலி, கோவை மாலை முரசு ஆசிரியர்களுக்கு எதிராகவும் பிடி விறாந்து உத்தரவு பிறப்பித்துள்ள தமிழ் நாடு சட்டப் பேரவையின் சபாநாயகரின் செயலை கண்டித்தே இந்த நடவடிக்கை.

சபாநாயகரின் இந்தச் செயல் பத்திரிகைச் சுதந்திரத்தை முடக்கி விடுவதற்கான ஒரு செயல் என்றும், இது ஆரோக்கியமற்றதோர் முன்னுதாரணத்தை உருவாக்கிவிட்டதென்றும் அந்தப் பத்திரிகையாளர் ஸ்தாபனங்கள் நேற்றுச் சென்னையில் கூட்டாக வெளியிட்ட அறிக்கையொன்றில் குற்றம் சாட்டியுள்ளன.

### யுத்த நிறுத்தம்

## அறிவித்ததன் பின்பும் காபூலில் மோதல்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் யுத்த நிறுத்தம் ஒன்றைக் கடைப்பிடிப்பதற்குத் தீவிரப்போக்குடைய தலைவரான குல்புத்தின் ஹெக்மத்தியார் உட்பட அங்கு போரிடும் முஜாகிதீன் போராளிக்குழுக்கள் இணங்கியிருப்பதாக இஸ்லாமாபாத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று பிப. சுமார் 3 30 மணிக்கு யுத்தநிறுத்தம் அமுலுக்கு வந்ததாகப் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முஜாகிதீன் சபையின் அமைப்பு அதனுடைய செயற்பாட்டைநிர்ணயிக்கும் நிபந்தனைகள்மற்றும் நிர்வாக வரம்புகளைஹெக்மத்தியார் ஒப்புக்கொண்டுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தலைநகரான காபூலில் கடும்சண்டை இடம் பெறுவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே ஆப்கானிஸ்தானில் 51 உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட இடைக்கால சபையின் தலைவரான பேராசிரியர் ஷேக் கப்துல்லாவையும் உறுப்பினரையும் ஏற்றிய வாகனத் தொடர் ஒன்று பெஷாவரிலிருந்து காபுல் நோக்கிச்சென்று கொண்டிருக்கிறது. இன்று இந்தத் தொடரில் செல்பவர்கள் ஆப்கான் அதிகாரப் பொறுப்பை ஏற்பார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

காபூலில் கடும்சண்டைநடப்பதால் இந்த வாகனத் தொடர் உடனடியாக காபூல் வந்தடைவது கடினம் என்று தெரிவிக்கப்படுகிறது.

## மேதின கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் மே தினத்தன்று மருதனார்மடத்திலிருந்து ஆரம்பமாகவுள்ள மேதின ஊர்வலத்தில் முறைசாராக் கல்விப் பிரிவு மாணவர்களும், போதனாசிரியர்களும், முதலுதவி நிலைய அங்கத்தவர்களும் பங்குபற்றவுள்ளனர்.

இவை தொடர்பான ஒழுங்குகள் மேற்கொள்ளும் பொருட்டு கலந்துரையாடலொன்று நாளை காலை 9 30 மணிக்கு முறைசாராக்கல்விப் பிரிவில் இடம் பெறவுள்ளது.

அனைத்து முறைசாராக, விப்பிரிவு மாணவர்களையும்ல் போதனாசிரியர்களையும், அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு. ச சுப்பிரமணியம் கேட்டுள்ளார்.

### வீரச்சாவு

ஆகிய ஐந்து வீரவேங்கைகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளனர் இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## மீனவர் மீது துப்பாக்கிச் சூடு

(குருநகர்)

பூநகரி - கல்முனைப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று அதிகாலை 3 மணியளவில் கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களை நோக்கிச் சுட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

மீனவர்கள் இராணுவத்தினரின் சூட்டுக்கு இலக்காகவில்லை. தொழிலைத் தொடர்ந்து செய்யமுடியாத நிலையில் திரும்ப நேர்ந்தது என்றும் மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (21)

## அவசரகூட்டம்

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை சகல பயிற்சி ஆசிரியமாணவர்களையும் நாளை புதன் கிழமை முற்பகல் 10.10 மணிக்கு கலாசாலை மண்டபத்தில் முக்கிய விடயம் பற்றிக் கதைக்கவிருப்பதால் தவறாது கலந்துகொள்ளும்வண்ணம் கலா. சாலை அதிபர் கேட்டுள்ளார்

இடபத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.